பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 24 புதன்கிழமை 10.11.2021 கதிர் 05

## இனி அது ரகசியம் அல்ல!

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியிடம் நேற்று ஒரு கேள்வி கேட்டேன்.

"அமெரிக்கா செல்கின்றீர்கள். தமிழர் பிரதிநிதியாகவா? தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதியாகவா? அதில் ஒரு குழப்பம் இருப்பது போல தோன்றியது.

பக்கம்02

# யாழில் கொட்டித்தீர்க்கும் மழை; 25 ஆயிரம் பேர் வரை பாதிப்பு!

## பல பகுதிகள் வெள்ளத்தில்



(இ.கலையமுதன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு முதல் பெய்வது வரும் அடைமழை காரணமாக மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் 7 ஆயிரத்து 584 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 508 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

☞ 2

## வெள்ள இடர் பாதிப்பையடுத்து

## யாழ்ப்பாணம் கிளிநொச்சி, மன்னார் பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை



(இ.கலையமுதன், ந.லோகதயாளன்,எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் இதனை அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள மூன்று மாவட்டங்களும் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் முன்வைத்த

☞ 2

## கடல்நீர் மட்டம் உயர்ந்ததால் வெள்ளம் வடியத் தாமதம்!

### யாழ்.அரச அதிபர் விளக்கம்

(இ.கலையமுதன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)



கடல் நீர்மட்டம் உயருவதன் காரணமாக வெள்ள நீர் வடிந்து செல்வதில் தாமதம் ஏற்படுகின்றது என யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

கடல் சீற்றம் அதிகமாக உள்ளமையால், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்

☞ 2

## கொழும்பில் காணாமல்போயிருந்த மூன்று சிறுமிகளும் வீடு திரும்பினர்

கொழும்பு, வாழைத்தோட்டம் பகுதியில் காணாமல்போயிருந்த மூன்று சிறுமிகள் மீளவும் வீடு திரும்பியுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் நேற்றிரவு இதனைத் தெரிவித்துள்ளது.

கொழும்பு - வாழைத்தோட்டம் பிரதேசத்தைச் சேர்ந்த 13 - 15 வயதுக்குட்பட்ட சிறுமிகளே நேற்றுமுன்தினம் தொடக்கம் இவ்வாறு காணாமல்போயிருந்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் மற்றும் உறவுக்கார சிறுமி ஒருவர்

☞ 2

## சீரற்ற காலநிலையால் 15 பேர் பரிதாபச் சாவு!





நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக மரணித்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்வடைந்துள்ளது. நேற்று மாத்திரம் 5 பேர் உயிரிழந்துள் ளனர் என்று அனர்த்த முகாமைத்துவமத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஐவர் காயமடைந்துள்ளமையுடன் ஒருவர் காணாமல்போயுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 17 மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 18 வீடுகள் முழுமையாகவும், 960 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

## கொரோனாத் தொற்றால் மேலும் 17 பேர் உயிரிழப்பு

நாட்டில் மேலும் 17 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை

☞ 2

## முடக்கத்தைத் தவிர மாற்று வழி இல்லை

### பிரதி சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தீவிரமடையாமல் தடுப் பதாயின் சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றுவதே அத்தியாவசியமா னதாகும். அவ்வாறில்லையெனில் நாட்டை முடக்குமாறு பரிந்துரைப்பதைத் தவிர சுகாதாரத் தரப்பினருக்கு வேறு மாற்று வழி கிடையாது.

- இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட

☞ 2

### போராட்டத்தில் பங்கேற்ற

## ஆசிரியை திடீர் சாவு!



அதிபர் - ஆசிரியர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட

☞ 2

## 700 ஐத் தாண்டியது நாளாந்தத் தொற்று

இலங்கையில் நேற்று 717 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 46 ஆயிரத்து 652 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 6 ஆயிரத்து 689 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து

☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதுதான் கேட்டேன்." – என்றேன்.

"இதில் என்ன குழப்பம்? அமெரிக்கா, சம்பந்தன் ஐயாவைக் கூட்டமைப்புத் தலைவராகக் கருதித்தான் இந்த அழைப்பை விடுத்திருக்கின்றது. அவர்தான் எங்களை நியமித்து அனுப்புகின்றார். ஆகவே நாம் கூட்டமைப்புப் பிரதிநிதிகளாகவே போகிறோம்." – என்று அறுத்து உறுத்துப் பதில் தந்தார் சுமந்திரன்.

அவரது பதிலைக் கேட்டதும் எனக்குள் இரண்டு கேள்விகள் பிறந்தன. ஒன்றை மட்டும் அவரிடம் கேட்டு வைத்தேன்.

"அப்படியானால் இந்த விடயம் பற்றி தங்களுடன் பேசவில்லை என்று கூட்டமைப்புக்குள் முணுமுணுப்பார்களே பங்காளிக் கட்சியினர்?" – என்று நான் சிண்டு முடிய முயற்சித்தேன்.

"இல்லையே... ஐயா வீட்டில் எல்லோரையும் வைத்துக் கொண்டுதானே அமெரிக்கத் தூதுவர் இது குறித்துப் பிரஸ்தாபித்தார். ஆகவே தெரியாது என்று அவர்கள் கூறமுடியாதல்லவா?" – என்றார் சுமந்திரன்.

"ஆங்கிலத்தில் கூறியமையால் புரியவில்லை என்று அவர்கள் கூறலாம் அல்லவா?" – என்றேன் நான்.

"அதுதான் நீங்கள் நுனி நாக்கு ஆங்கிலம் என்று கூறிவிட்டீர்களே...!" – என்று சிரித்துச் சமாளித்தார் சுமந்திரன்.

ஆனால் ஒரு விடயம். அமெரிக்கத் தூதுவர் ஜூலை 16ஆம் திகதி சம்பந்தனின் இல்லத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களைச் சந்தித்தபோது சம்பந்தனுடன் மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரன் ஆகியோர் மட்டுமே இருந்தனர். மற்றொரு பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் சித்தார்த்தன் இருக்கவில்லை, அந்த நிகழ்வில் அவர் பங்குபற்றவில்லை என்பதுதான் என் நினைவு. ஆகவே அவருக்கு இவ்விடயங்கள் தெரியாமல் இருந்திருக்கும்.

சிண்டு முடியும் என் போக்கில் இன்னொரு கேள்வி சுமந்திரன் – சம்பந்தன் அணியை நோக்கி உள்ளது. அதை அத்தரப்பிடம் இன்னும் நான் கேட்கவில்லை. பங்காளிக்கட்சிகளைக் கிளறி விடுவதற்காக அந்தக் கேள்வியையும் ஓர் எத்துக்கு இங்கு எத்தி விடுகிறேன்.

"சரி, அமெரிக்கா, தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் பேசுவதற்கு ஒரு குழுவை அழைத்தது. அது சட்ட விற்பன்னர் குழு என்று விசேடமாகக் குறிப்பிட்டு அழைத்ததா? அப்படி அழைத்திருந்தாலும், அதில் யாரை அனுப்புவது என்று சம்பந்தன் பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் ஒரு சுற்றுப் பேச்சு பேசியிருக்கக் கூடாதா? ஒரு தகவலுக்குத் தன்னும் கேட்டிருக்கக் கூடாதா? வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளருக்கு எங்களிடமும் தகுதியான வேட்பாளர்கள் இருக்கின்றார்கள் என்று கூறும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சம்பந்தன் எதிர்பார்க்கும் 'கலிபரில்' சட்ட விற்பன்னர் – விடயம் தெரிந்தவர் – தங்களிடமும் இருக்கின்றார் என்று பரிந்துரை செய்திருக்க மாட்டாரா?"

– இந்தக் கேள்விகளுக்கு சம்பந்தன் – சுமந்திரன் அணியிடம் பதில் இருக்குமோ தெரியவில்லை. ஆனால் கூட்டமைப்பை கூத்தமைப்பாகக் காட்ட விரும்பும் தரப்புகள் இப்படிக் கேள்வி எழுப்ப முடியும். கயிறு கொடுத்திருக்கிறேன் நான். பற்றிக் கொள்வது சம்பந்தப்பட்ட தரப்புகளையும் வழமையாக இத்தகைய கிளறல்களைச் செய்யும் இணைய ஊடகங்களையும் பொறுத்தது.

அமெரிக்கா செல்லும் கூட்டமைப்புக் குழுவைச் சம்பந்தன் தேர்ந்தெடுத்ததில் பிறிதொரு விடயமும் உண்டு.

இது கந்த சஷ்டிக் காலம். முருகனை 'தகப்பன்சாமி' என்பார்கள். தந்தைக்கே குருவானவன் முருகன். சிவனுக்கே குருவாகி உபதேசித்தவன். அத்தகைய ஓர் இணைப்பு அமெரிக்கா செல்லும் பிரதிநிதிகள் தெரிவிலும் உண்டு.

அதற்குள் இறங்க முன்னர், பிறிதொரு சொசுறுத் தகவலை முதலில் பார்ப்போம்.

இந்தியாவின் முன்னர் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசில் மிக முக்கிய – மூத்த – நிலையில் இருந்தவர் பிராணாப் முகர்ஜி.

ஆரம்பத்தில் பிரணாப் முகர்ஜி நிதி அமைச்சராக இருந்தார். அவருக்குக் கீழ் இந்திய மத்திய வங்கி இருந்தது. அதன் ஆளுநராக மன்மோகன் சிங் பணியாற்றினார். அதாவது நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் கீழ்.

மத்திய வங்கி ஆளுநராக இருந்து ஓய்வுபெற்ற மன்மோகன் சிங்கை, திடீரென நிதி அமைச்சராகவும் பின்னர் இந்தியப் பிரதமராகவும் ஆக்கினார் சோனியா காந்தி. இப்போது பிரதமர் மன்மோகன் சிங்கின் அரசில் அவருக்குக் கீழ் ஓர் அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

ஆனால், சில காலத்தில் இந்தியாவின் ஜனாதிபதியானார் பிரணாப் முகர்ஜி. ஜனாதிபதியான முகர்ஜியின் கீழ் மீண்டும் வந்தார் பிரதமர் மன்மோகன் சிங்.

இப்படி ஒருவர் மீது மற்றவர் மேலதிகாரம் செய்யும் பதவி நிலையில் மாறி மாறி அமர்ந்தனர் பிரணாப் முகர்ஜியும் மன்மோகன் சிங்கும்.

இனி, அமெரிக்கா செல்லும் கூட்டமைப்புக்குழுவுக்குள் செல்வோம்.

மூவர் குழு யார் என்பது தெரியும். ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந்திரன், கனகேஸ்வரன் மற்றும் திருமதி நிர்மலா சந்திரஹாசன். பின் இருவரும் வயதில் மூத்தவர்கள் என்றாலும், குழுவுக்கு எழுத்தில் கொடுக்காத தலைமைப் பதவி சுமந்திரனுக்கு.

இதில் வேடிக்கை என்னவென்றால் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த சுமந்திரன், மேற்படி கனகேஸ்வரனின் கீழ்தான் பயிற்சி பெற்றார். அதாவது சுமந்திரனின் சீனியர் லோயர் கனகேஸ்வரன்தான். இப்போது சுமந்திரனின் தலைமையில் அமெரிக்கா செல்லும் சட்ட நிபுணர் குழுவில் கனகேஸ்வரன் ஒருவர். அதாவது ஜூனியர் சீனியர் ஆகிவிட்டார். ஏறத்தாழ 'தகப்பன் சாமி' நிலைமை.

இந்தியாவிலிருந்த குழுவின் மற்றொரு உறுப்பினரான திருமதி நிர்மலா சந்திரஹாசன் நேற்றுக் கொழும்பு வந்து விட்டார். அமெரிக்கா புறப்பட முன்னர் குழுவினர் மூவரும் ஒன்றாக சம்பந்தனுடன் ஆலோசனை கலப்பர் எனத் தெரிகின்றது.

இன்னும் சில தகவல்கள் உண்டு. நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு மிக நெருக்கமானவர் இந்த கனகேஸ்வரன். விக்னேஸ்வரனுக்காக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு வரை எல்லாவற்றிலும் முன்னிலையானவர் அவர்தான். முன்னர் சம்பந்தன் – விக்னேஸ்வரன் இடையிலான சமரச சந்திப்புகள் பெரும்பாலும் கனகேஸ்வரன் வீட்டில்தான் நடந்தன. தமக்கும் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கும் நெருக்கமான கனகேஸ்வரனை இந்தக் குழுவில் சேர்த்து விட்டிருக்கின்றார் சம்பந்தன். ஆகையால் இக்குழு பற்றி விக்னேஸ்வரன் சற்று அடக்கியே வாசிப்பார் என்று நம்புகின்றேன்.

அதேபோன்ற நிலைமைதான் கஜேந்திரகுமாருக்கும். கனகேஸ்வரனின் தந்தை கனகநாயகமும் சிறந்த சட்டத்தரணி. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸில் ஜீ.ஜீ.பொன்னம்பலத்துடனும், பின்னர் மகன் குமார் பொன்னம்பலத்துடனும் மிக நெருக்கமாக – மிகஅந்நியோன்னியமாக – மிகவும் நம்பிக்கைக்குரிய விதத்தில் – பழகியவர்.

ஆகவே அவரின் மகன் தொடர்பில் பொன்னம்பலத்தின் பேரன் – குமாரின் மகன் – கொஞ்சம் அடக்கியே வாசிப்பார் என்பது என் கருத்து.

பார்ப்போம், என்ன நடக்கின்றது என்று...!

– மின்னல் –

## கடல்நீர்மட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும், கரையோர மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறும் அவர் அறிவுறுத்தினார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகக்குறுகிய காலத்திலேயே மழை வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அநேகமான வீதிகள், வீடுகள் மற்றும் பொது இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக தற்போதைய நிலையில் சேத விபரங்களை மதிப்பீடு செய்து வருகின்றோம். அதேபோன்று உள்ளூராட்சி சபைகள் ஒத்துழைத்துச் செயற்பட்டு வருகின்றன.

வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றவர்களுக்குத் தேவையான உணவு வசதிகள் உட்பட ஏனைய வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் செய்து வருகின்றனர்.

நீர் நிலைகள் பல நிரம்பியுள்ளதன் காரணமாகச் சிறுவர்களை மிகப் பாதுகாப்பாக பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் இவ்வாறான நேரங்களில் பல விபத்துக்கள் ஏற்பட்டிருந்தன. அவற்றை அடையாளப்படுத்தி மக்களுக்குத் தெரியப்படுத்த பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி சபையினரைக் கேட்டிருக்கின்றோம்.

இந்த வெள்ள நிலைமை தொடர்ந்து ஏற்படுமிடத்து சுகாதார நிலையைக் கவனத்தில் எடுத்து அதற்கான முன்னாயத்தம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்து வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். இதன் பின்விளைவுகளை எதிர்கொள்ளக்கூடிய வகையில் ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

பொதுமக்கள் எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட வேண்டும்.

கடல் நீர்மட்டம் உயருவதன் காரணமாக வெள்ள நீர் வடிந்து செல்வதில் தாமதம் ஏற்படுகிறது. தொண்டமானாறு நாவற்குழியில் உள்ள தடுப்பணைகள்கள் திறந்து விடப்பட்டு நீர் வழிந்தோட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. பொதுமக்கள் வடிகால்களைச் சுத்தப்படுத்தி நீர் வழிந்தோடத்தக்க வகையில் வைத்திருக்க வேண்டும்.

இந்த நிலைமை ஓரிரு நாள்களுக்குத் தொடரலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்திருப்பதால் பொதுமக்கள் இயற்கை அனர்த்தத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதேவேளை கடல் சீற்றம் கடலுக்குச்அதிகமாகக் காணப்படுவதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம். கரையோர மக்களே பாதுகாப்பாக இருங்கள் – என்றார்.

## முடக்கத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதாரத் தரப்பினரால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தற்போதுள்ள நிலைமையை மிகவும் அபாயம் மிக்கதாகவே கருத வேண்டும். தற்போதுள்ள நிலைவரத்தின் உண்மை நிலையை அடுத்து வரும் வாரங்களிலேயே தெளிவாகக் காண முடியும்.

இதன்போது ஏற்படும் அபாயத்திலிருந்து மீண்டு மீண்டும் சுமுகமான நிலைமைக்குச் செல்ல முடியாத சூழல் ஏற்படக்கூடும்.

எனவே, கொரோனாத் தொற்று பரவுவதைத் தடுப்பதற்குக் காணப்படும் ஒரேயொரு வழி சுகாதார விதிமுறைகளை முறையாகப் பேணுவது மாத்திரமேயாகும்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கையில் படிப்படியான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதோடு, நாளாந்தம் இனங்காணப்பட்ட தொற்றாளர் எண்ணிக்கை சுமார் 500 ஆகவே காணப்பட்டது.

எவ்வாறிருப்பினும் அதன் பின்னர் ஏற்பட்ட சிறு அதிகரிப்பும் சிறந்த அறிகுறியல்ல என்பதை நாம் தொடர்ச்சியாகக் கூறிக் கொண்டிருந்தோம்.

அதற்கமையவே தற்போது நாளாந்தம் சுமார் 600 தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். இது தொடர்பில் சகல தரப்பினரும் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். – என்றார்.

## ஆசிரியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழிற்சங்கப் போராட்டத்தில் பங்கேற்ற இளம் ஆசிரியை ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

தெனியாய, கொட்டப்பொல பகுதியில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்றிருந்த 27 வயதுடைய ஆசிரியையே திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த குறித்த ஆசிரியைக்கு 13 வயதில் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## 700ஐத் தாண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 22 ஆயிரத்து 184 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிந்துரைக்கமைய வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியுடன் இன்று பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் கூறியுள்ளார்.

## யாழில் கொட்டித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவர்களில் 139 குடும்பங்களைச் சேர்ந்த 463 நபர்கள் இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6.30 மணி வரையிலான பாதிப்பு தொடர்பாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 75 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இந்தத் தரவுகள் கிடைத்துள்ளன.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகியோரே காணாமல்போயிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தொற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

13 ஆயிரத்து 192 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 17 பேரில் 10 ஆண்களும், 7 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**பதிவுக்கட்டணம் வைப்புச் செய்ய வேண்டிய கணக்கு இலக்கம் திருத்தம்**

01.11.2021 அன்று பிரசுரிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் – 2022 என்ற விளம்பரத்தின் பதிவுக்கட்டணத்தை வைப்புச் செய்ய வேண்டிய சரியான கணக்கு இலக்கம் 8500003900026, மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆகும். ஏனைய நிபந்தனைகள் எதிலும் மாற்றம் இல்லை.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

# ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி கிளிநொச்சியில் ஓர் அடிகூட நகரவில்லை!

## ஒருங்கிணைப்புக் குழு தலைவர் மக்களை ஏமாற்றுகிறார் என்கிறார் கரைச்சி தவிசாளர்

ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதிப்புனரமைப்பில் ஐ-றோட் திட்ட வீதியை திறந்து வீதி ஒருங்கிணைப்புக் குழுவின் அரசையும் மக்களையும் ஏமாற்றியுள்ளனர் என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதிப்புனரமைப்பு தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

இலங்கை பூராகவும் தேசிய நிழ்ச்சித் திட்டமாக ஒருலட்சம் கிலோமீற்றர் நீளமான கிராமிய வீதிகளை புனரமைத்து திறந்து வைக்கும் நிகழ்வு நாடு தளுவிய ரீதியில் இடம்பெற்றது.






நான் நினைக்கின்றேன் இலங்கைத் தீவிலே இருக்கின்ற 25 மாவட்டங்களிலும் இந்த தேசிய நிகழ்ச்சித்திட்டம் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றது.

கிளிநொச்சியைப் பொறுத்தவரையில் திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற வீதி பிரதேச சபைக்குச் சொந்தமான வீதி. இந்த பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியை நாங்கள் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஐ றோட் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படுகின்றபொழுது உலகவங்கியின் நிதியுதவியோடு மேற்கொள்ளுவதற்காக நாங்கள் கையளித்து, குறித்த வீதி ஐ றோட் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு இப்பொழுது நிறைவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுவரை குறித்த வீதி பிரதேச சபையிடம் ஒப்படைப்பு செய்யப்படவில்லை.

ஆனால், இப்போது அந்த வீதி வீதி அபிவிருத்தி அதிகார சபையாலே திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. இது எங்களைப் பொறுத்தவரையில் கவலை தருகின்ற விடயம். ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதிகளைப் புனரமைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் கடந்த 10 மாதங்களுக்கு முன்பு கிளிநொச்சியிலே ஆரம்பிக்கப்பட்டு, பாரதிபுரம் செபஸ்ரியார் வீதி, சக்திபுரம், எள்ளுக்காடு போன்ற வீதிகள் உட்பட 16 வீதிகளுக்கு பெயர்ப்பலகை இடப்பட்டமையுடன், அடிக்கற்களும் நாட்டப்பட்டிருந்தன.

அந்த பெயர் பலகையிலே இலங்கையின் முக்கியமான அமைச்சர்களின் படங்கள் பொறிக்கப்பட்டு அபிவிருத்தி தொடர்பான விவரங்களுடன் இன்றும் இருக்கின்றது. ஆனால் இன்றுவரை அந்த 16 வீதிகளும் ஓர் அடிகூட புனரமைக்கப்படாத நிலை காணப்படுகின்ற பொழுது, அந்த வீதிக்கு பதிலாக தேசிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிலே வீதி திறந்து காட்டியிருப்பது எங்களுடைய மக்களை ஏமாற்றுகின்ற செயல் மாத்திரமல்ல, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருக்கின்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் இந்த விடயத்திலே கரிசனை கொள்ளாதமை மிகுந்த கவலையை தருகின்றது.

அவருடைய பிரதிநிதிகள் இந்த நிகழ்விலே கலந்துகொண்டிருக்கின்றார்கள். உண்மையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் அமைச்சர், தன்னுடைய அமைச்சரவையையும், தான் சார்ந்திருக்கின்ற பிரதம அமைச்சரையும், நாட்டின் ஜனாதிபதியையும் அவமானப்படுத்திய செயலாகவே நான் பார்க்கின்றேன்.

ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட ஒரு லட்சம் கிலோமீற்றர் வேலைத்திட்டம் கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் ஓர் அடிகூட மேற்கொள்ளப்படாத பொழுது, அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதாக காண்பித்து தங்களுடைய செல்வாக்கை மக்களிடத்தில் நிமிர்த்திக்கொள்ள எடுத்த இந்த முயற்சியை கரைச்சி பிரதேச சபை கண்டிக்கின்றது.

ஏனெனில் குறித்த வீதி எங்களுக்குச் சொந்தமானது. ஆக இங்கு நடைபெற்றிருப்பது ஓர் ஏமாற்று செயல். எங்களுடைய பொதுமக்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள். ஐ ரோட் வேலைத்திட்டம் ஒருலட்சம் வீதி புனரமைப்பாக மாற்றி எமது மக்களை ஏமாற்றியிருக்கின்றார்கள்.

அதேபோல் அண்மையில் கரைச்சி கண்டாவளை பிரதேசங்களில் ஏற்கனவே மூன்று நான்கு வருடங்களாக பாவனையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வெதுப்பகங்களை அமைச்சர்கள் வந்து திறந்து வைத்திருக்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு முன்பு பிரதேச செயலாளரால் திறந்து வைக்கப்பட்ட தும்புத் தொழிற்சாலையும் எப்போதோ மாவட்ட அரச அதிபரால் திறக்கப்பட்ட சேதனப் பசளையையும் கடந்த வாரம் அமைச்சரால் மீளத் திறக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக மக்களை ஏமாற்றும் செயல் நிறுத்தப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தன் இருப்புக்காக பரபரப்பு அரசியல் செய்யாது மக்களுக்காக சேவை ஆற்றியவர் சிவயோகன்!

### இறுதி நிகழ்வில் கஜதீபன் இரங்கல்



யாழ்ப்பாணம் – நவ.10

மக்கள் மத்தியில் தம்மை நிலை நிறுத்திக் கொள்வதற்காக எந்நேரமும் பரபரப்பு அரசியலை மேற்கொள்பவர்கள் மத்தியில் தான் சார்ந்த மக்களுக்காக சிவயோகன் அவர்கள் நேர்மையாக பணியாற்றியவர் என்பது பெருமைக்குரிய விடயம் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.

காலமான முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகனின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிவயோகன் தமிழரசுக் கட்சியின் அடிமட்ட தொண்டராக இருந்து கட்சியின் முக்கிய முடிவுகளை எடுக்கக்கூடிய மத்திய குழு உறுப்பினராக உயர்ந்தவர். ஆனாலும் அவர் கூட்டமைப்பாக ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இறுதிவரை செயற்பட்டார். மாகாண சபையில் பல்வேறு ஆக்கபூர்வமான உரைகளை ஆற்றி தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை திடம்பட நிறைவேற்றியவர்.

இன்று ஐறோட் வேலைத்திட்டத்தில் புனரமைக்கப்பட்ட வீதிகளை திறந்து வைத்து தமது அரசியலை முன்னெடுப்பவர்கள் அமரர் சிவயோகன் அவர்களை நன்றியோடு நினைவுகூரவேண்டும். ஏனெனில் மாகாண சபையால் முன்னெடுக்கப்பட்ட 'ஐ றோட்' வேலைத்திட்டத்தில் முக்கிய பங்காற்றி அந்தத் திட்டத்தை செயற்பட வைத்தவர். இவ்வாறான ஒருவரின் இழப்பு எமது தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. – என்றார்.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மத்திய வங்கியின் குளறுபடி!

'உள்ளதையும் கெடுத்தானாம் நொள்ளைக் கண்ணன்' என்பார்கள். அத்தகைய ஒரு வேலையைத்தான் செய்திருக்கின்றது இலங்கை மத்திய வங்கி என்று தோன்றுகின்றது.

அந்நிய செலாவணிக் கையிருப்புக் கரைந்தமையால் நொண்டிக் கொண்டிருக்கின்றது நாட்டின் பொருளாதாரம். அந்நிய செலாவணிக் கையிருப்பை மேம்படுத்துகின்றோம் என்ற பெயரில் மத்திய வங்கி எடுத்திருக்கும் ஒரு நடவடிக்கை, கிடைத்து வந்த அந்நிய செலாவணி வருமானத்துக்கும் ஆப்படித்திருப்பதாகத் தெரிகின்றது.

நாட்டில் ரூபாவின் பெறுமதி மோசமாக வீழ்ச்சியடைந்து விட்டது. ஒரு டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி 202 ரூபா முதல் 203 ரூபா வரை என ஒரு செயற்கை நிலையில் வைத்திருப்பதாகக் காட்டுகின்றது மத்திய வங்கி.

வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்குள் உத்தியோகபூர்வமாகக் கொண்டு வரப்படும் அந்நிய செலாவணிக்கு இத்தகைய வீதத்தில்தான் பணப் பரிமாற்றம் செய்கின்றது மத்திய வங்கி.

ஆனால், உண்மையில் மத்திய வங்கிக்கு வெளியில் – பணப்பரிமாற்று மையங்களில் – ஒரு டொலரின் பெறுமதி 235 ரூபாவாகும்.

அதாவது வெளிநாட்டில் உழைக்கும் நம்மவர் அல்லது வெளிநாட்டில் இருந்து நம்நாட்டுக்குப் பணம் அனுப்புவர், மத்திய வங்கி ஊடாக பணத்தை அனுப்பினால் அவர்களின் பணத்துக்கு டொலருக்கு 202 ரூபா என்ற அடிப்படையில்தான் உள்ளூர்ப் பணம் கிடைக்கும். அதையே மத்திய வங்கிக்கு வெளியில் தனியார் ஊடாக மாற்றினால் பதினைந்து முதல் இருபது வீதம் அதிக பணம் கிடைக்கும்.

அதனால் வெளிநாட்டில் பணத்தை உழைத்து இங்கு நாட்டுக்குப் பணமாக அனுப்புவர்கள் தமது பணத்தை இங்கு டொலராகவோ அல்லது தாம் உழைத்த வெளிநாட்டுக் கரன்ஸிலோ அதை வைப்பில் வைத்திருக்க விரும்புகின்றனர். அப்படி இல்லாமல் இலங்கை ரூபாவாக மாற்றுவதாயின் அதனை மத்திய வங்கி ஊடாக அல்லாமல் வேறு வழியில் மாற்றுகின்றனர். பெரும்பாலும் உண்டியல் முறையில் அல்லது டொலரையோ, வெளிநாட்டு நாணயத்தையோ தாளாக நாட்டுக்குள் அனுப்பி, வெளியில் பணபரிவர்த்தனை நிலையங்களில் அவற்றை மாற்றுகின்றனர்.

இதனால், அரசின் அந்நிய செலாவணி நிதிக் கையிருப்பில் இப்படிப் பரிமாற்றம் செய்யும் பணம் சேமிக்கப்படாமல், அதைத் தாண்டிச் சென்று விடுகின்றது.

அந்நிய செலாவணிக் கையிருப்பு மேம்படாத நிலைமையால் கவலையுற்ற மத்திய வங்கி அதைச் சீரடையச் செய்ய அதிரடி நடவடிக்கை ஒன்றை எடுத்திருக்கின்றது. அதன்படி, வெளிநாட்டில் வதியும் ஒருவர் நாட்டில் உள்ள தனது கணக்கு அல்லது தனது நிறுவனத்தின் கணக்குக்கு வெளிநாட்டு கரன்ஸியில் அனுப்பும் பணம், அது வங்கிக் கணக்கு வந்த அன்றே இலங்கை நாணயமாக மாற்றப்பட்டு விடும். அதாவது மத்திய வங்கி நிர்ணயித்துள்ள நாணயப் பெறுமதிப்படி அந்த வெளிநாட்டுக் கரன்ஸி மாற்றப்பட்டு, இலங்கை நாணயத்தில் அந்த நபரின் கணக்கில் சேர்க்கப்பட்டு விடும். அப்படி மாற்றப்படும் வெளிநாட்டுப் பண அளவு, அந்நிய செலாவணியாக அரசுக்கு சேரும் என்று மத்திய வங்கி நம்புகின்றது.

இதனால், தனிப்பட்டவர்களைப் பொறுத்தவரை அவர்கள், வெளிநாட்டு நாணயத்தில் உழைத்த பணத்தை அந்த நாணயத்தில் இலங்கையில் உள்ள தமது வங்கிக் கணக்கில் சேமிக்க முடியாத இக்கட்டு ஏற்பட்டுள்ளது. மத்திய வங்கி நிர்ணயித்துள்ள குறைந்த விகிதாசார பெறுமதியில் அது உடனடியாகவே இலங்கைப் பணமாக மாற்றப்பட்டு விடும். வெளியில் அதிக பெறுமதிக்குப் பெறக்கூடிய தொகையை, தமது இலங்கையில் உள்ள வங்கிக் கணக்கில் வைப்பிடுவதன் மூலம் கணிசமாக இழக்க யாரும் விரும்பமாட்டார்கள். ஆகவே இனிமேல் அந்த வங்கிக் கணக்குகளில் தமது வெளிநாட்டு சம்பாத்தியத்தை வைப்பிடுவதையே நிறுத்தி விடுவர்.

ஆக, மத்திய வங்கியின் இந்த நடவடிக்கை 'பொன் முட்டையிடும் வாத்தின் கழுத்தை அறுத்த கதைக்கு' ஒப்பானது.

இலங்கையர்களும், இலங்கையைத் தளமாகக் கொண்ட நிறுவனங்களும் வெளிநாட்டில் இருந்து அந்த நாட்டின் கரன்ஸிகளில் இங்குள்ள தமது கணக்குக்கு அனுப்பும் பணத்தை அந்தக் கரன்ஸிகளில் சேமிக்கும் வாய்ப்பை முறியடித்து அதைச் சூறையாடும் மத்திய வங்கியின் நடவடிக்கை அத்தகைய முட்டாள்தனமான வேலைதான்...!

## கொரோனா குணமடைவு மேலும் அதிகரிப்பு

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 6 ஆயிரத்து 689 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 22 ஆயிரத்து 184 ஆக அதிகரித் துள்ளது.

தற்போது நாட்டில் கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 45 ஆயிரத்து 935 ஆகக் காணப் படுகின்றது.

அவர்களில் 13 ஆயிரத்து 875 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 9 ஆயிரத்து 876 பேர் தொடந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## உயர்தரப் பரீட்சை விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான காலம் நீடிப்பு

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கால எல்லை நீடிக்கப் பட்டுள்ளது. இன்றுடன் டுநிறை வடைய விருந்த காலக்கெடு நவம்பர் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர பரீட்சை அடுத்த ஆண்டு பெப்ரவரி 7 முதல் மார்ச் 05 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாகன உதிரிப்பாக இறக்குமதி இதுவரை தடை ஏதுமில்லையாம்

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

வாகன உதிரி பாகங்களை இறக்குமதி செய்வதற்கு இதுவரை தடை விதிக்கப்படவில்லை என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளதாக நாடாளு மன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் நேற்று நாடாளு மன்றத்தில் கேள்வியெழுப் பியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் ஹொான் சேமசிங்க, டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை வலுப் படுத்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகக் கூறினார்.

அத்தோடு வாகன உதிரிப்பாகங்களின் விலையில் வரம்பற்ற அதிகரிப்பு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குறிப் பிட்டார்.

## ஊற்றுபுலம் வள்ளுவர் பண்ணைக்கான போக்குவரத்து சீர் செய்யப்பட்டது!

கிளிநொச்சி ஊற்றுபுலம் வள்ளுவர் பண்ணைக்கான போக்குவரத்து சீர் செய்யப் பட்டது. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஊற்று புலம் பகுதியில் வீதி அபிவிருத்தி பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலஷ்யில் தற்பொழுது ஏற்பட்ட கால நிலை மாற்றம் காரணமாக புதுமுறிப்பு குளத்தின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்தது. இந்த நிலஷ்யில் ஊற்றுப் புலம் கிராமத்தில் தனி தீவாக 90 குடும்பங்கள் சிக்கும் அபாய நிலை தொடர்பில் அவசர நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் செய்தி வெளியானதை அடுத்து குறித்த இடத்தை மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டமையுடன், துரி தமாக போக்குவரத்துக்கு ஏற்ப சீர்செய்யுமாறு ஒப்பந்தகாரரைப் பணித்துள்ளார்.

இந்த நிலையில் இரவிரவாக குறித்த பாலத்தின் ஊடாக போக்குவரத்தை மேற்கொள்வதற்கான தற்காலிக பணிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலஷ்யில் மக்கள் தமது அவசர தேவைகளுக்காகக் குறித்த வீதியைப் பயன்படுத்த முடியும் எனவும் மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

## அரசு வால் இல்லாத மாடு நிலை அமைச்சர் கம்மன்பில கிண்டல்!



அரசாங்கம் தற்போது வால் இல்லாத மாடு போன்ற அரசாங்கமாக மாறியுள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். டொலர் தட்டுப்பாடு காரணமாக நாடடுக்குள் பொருளகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விலைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்கு அரசாங்கம் சென்றுள்ளமையே இதற்குக் காரணம். இதன் காரணமாக அரசாங்கம் வால் இல்லாத மாடு போன்று மாறியுள்ளது எனவும் கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்"

- மூப்பர் அம்பிலோகியோஸ்
(கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கின் தேவைப்பாடுகள் மிகவும் அதிகம் உள்ளன

## வியாழேந்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருக்கும் அனைத்து நிதியையும் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் அபிவிருத்திப்பணிகளுக்காகப்பயன்படுத்துவோம் மீண்டும் திறைசேரிக்கு ஒரு ரூபாவேனும் திருப்பி அனுப்ப அனுமதிக்கமாட்டோம் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தில் விவசாயிகளுக்கான விதை பொதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்பு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக 50 ஆயிரம் இஞ்சி விவசாயிகளுக்கும் 3 ஆயிரம் உளுந்து விவசாயிகளுக்கும் 2 ஆயிரத்து 500 பாசிப்பயறு உற்பத்தி செய்யும் விவசாயிகளையும் 7 ஆயிரம் கூட்டெரு உரம் தயாரிக்கும் விவசா-யிகளுக்கு விவசாய உபகரணங்களும் வழங்கப்பட உள்ளன. இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக மட்டக்களப்புமாவட்டத்தின்அனைத்துபின்தங்கிய பிரதேசங்களில் உள்ள விவசாயிகளையும் வலுப்படுத்துவது எமது நோக்கமாக இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தி தொடர்பாகப் பல்வேறு முன்மொழிவுகளை நான் அரசாங்கத்துக்கு முன் வைத்துள்ளேன்.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பாரிய அளவில் உள்வாங்கப்பட உள்ளன எனத் தெரிவித்தார்.

# உள்ளகப் பேச்சு ஊடாகவே முரண்பாடுகளை தீர்க்கலாம்

## பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு



அரசாங்கத்துக்குள் எழுந்துள்ள பிரச்சி னைகளுக்கு உள்ளக பேச்சு ஊடாக மாத் திரமே தீர்வுகாண முடியும் என வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

கூட்டணி அரசாங்கத்துக்குள் பிரிவுகள் எழுந்துள்ள நிலையில் புத்தமத போதனைக்கு அமைய பங்காளிக் கட்சியினர் செயற்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

2019 இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் போது சர்வதேச மட்டத்தில் பெரும்சவாலையையும்தற்போதுவரை கொரோனாவை யும் எதிர்கொள்வதை பங்காளிக் கட்சியினர் விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும் குறிப் பிட்டார். ஆகவே அனைத்துத் தரப்பினரும் ஒத்து ழைப்புடனும் பொறுமையுடனும் செயற்படுகின்றமை அவசியம் என்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அரசாங்கத்துக்குள் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் தொடர்பாக மகா நாயக்க தேரர்களுடன் கலந்துரையாடி அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டுள்ளோம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# விவசாய சமூகத்துடன் இணைந்து அரசுக்கெதிராக 16 இல் போராட்டம்

## ஹரின் அறைகூவல்



நவம்பர் 16 ஆம் திகதி 20 லட்சம் விவசாய சமூகத்துடன் இணைந்து அரசுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். கடந்த திங்கட்கிழமை நடை பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் அண்மையில் ஆற்றிய உரையில் விவசாய சமூகத்திற்கு ஜனாதிபதி கடுமையான எச்சரிக்கை விடுத்தார் எனக் குற்றம் சாட்டியுள்ளார். அத்தோடு கொரோனாத் தொற்றால் உயிரிழந்த 13 ஆயிரம் குடும்பங்களுக்காக அந்த உரையில் எதையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருக்கவில்லை என்றும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். மக்கள் தமது வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், அர்த்தமற்ற வகையில் ஜனாதிபதி கருத்து தெரிவித்து வருகிறார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ குற்றம் சாட்டினார்.

# யாழ்.போதனா வைத்தியசாலையின் கிளினிக் சிகிச்சைகள் மந்தகதியில்

## தாமதித்து வருகைதருமாறு பணிப்பாளர் அறிவுறுத்தல்



யாழ்.போதனா வைத்தியசா லைக்கு சாதாரண சிகிச்சை பெற வருவோர் சற்று தாமதமாக வருமாறு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் பெய்து வரும் கனமழை மற்றும் தாதியர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் கிளினிக் பிரிவு மற்றும் சாதாரண பிரிவுகளின் செயற்பாடுகள் மந்த கதியில் இடம்பெற்று வருகின்றன எனவும், எனவே பொதுமக்கள் தற்போதுள்ள மழை குறைவடைந்ததன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

கிளினிக் பகுதி மற்றும் இது இருதய சிகிச்சை கிளினிக் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதன் காரணமாக தற்போது சிகிச்சைகள் இடம்பெறாத நிலை காணப்படுகின்றது.

எனவே பொதுமக்கள் சாதாரண சிகிச்சை பெற வருவோர் மழை முடிந்த பின்னர் வருகை தந்து சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுமாறும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

எனினும் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் ஏனைய விசேட வைத்திய சேவைகள் அனைத்தும் இடம்பெறுகின்றன எனவும் எனினும் சாதாரண சிகிச்சைகள் மாத்திரம் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# வன்னேரி, கனகாம்பிகை குளம் என்பன வான்பாய ஆரம்பித்தன

கிளிநொச்சி வன்னேரிக்குளம் வான்பாய ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக தாழ்வுநில பகுதி மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

அதேபோன்று கனகாம்பிகை குளமும் வான்பாய ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ரம்புக்கன்னவில் மண் சரிவு புதையுண்டு மூவர் மரணம்

கேகாலை, ரம்புக்கன்ன பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு மூவர் உயிரிழந்துள்ளமையுடன், ஒருவர் காயமடைந்துள்ளார் என மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

தாயும், 8 மற்றும் 14 வயதான அவரது இரு மகள்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த தந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

# நல்லூரும் வெள்ளத்தில்!





நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சீரற்ற வானிலை நிலவி வரும் நிலையில், பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்தநிலையில் யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 187

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**471.அப்படியானால் போரே தொடர வேண்டும் என்ற முடிவுகளுக்கு அமெரிக்காவா பின்னணியில் நின்றது?**

தீர்ப்பாயம் எடுத்துக்காட்டிய ஆதாரங்களில் அமெரிக்கா தன்னுடைய நலன்களுக்காக முன்னணியில் நின்றது. 2006 இன் கடைசி மாதங்களில் சமாதானப் பேச்சு முறிந்ததா? முடிந் ததா? இவற்றுக்கெல்லாம் பிரபாகரனின் மாவீரர் தினப் பேச்சுக் காரணமா அன்றில் மஹிந்த ராஜபக்ஷவின் திருகுதாளங்கள் காரணமா என ஊடகங்கள் விவாதித்து கொண்டிருந்த நாள்களில் அமெரிக்கா தனது நோக்கில் மும்முரமாக இருந்தது.

2006 இன் தொடக்கப் பகுதிகளில் போரில் மனித உரிமை மீறல்கள் பற்றி கரிசனை கொண்டு அமெரிக்கா காங் கிரஸ் ஸ்ரீலங்காவுக்கான ஆயுத ஏற்றுமதிக்கும் இராணுவங்களுக்கு இடையிலான தொடர்புகளுக்கும் சில நிபந்தனைகள் விதித்திருந்தது. மனித உரிமை அமைப்புகளுக்கு இந்த நிபந்தனைகள் வெளியிடப்பட்டன. ஆனால் பின்னணியில் அந்த நிபந்தனைகள் எல்லாம் புறம் தள்ளப்பட்டு அமெரிக்காவின் உதவிகள் பன்மடங்கு கூட்டப்பட்டன.

ஒக்ரோபர் 2006 ஜூலை ஆயிரத்துக்கும் மேலான அமெரிக்க கடற்படை வீரர்கள் முன் எப்போதும் இல்லாதவாறு அமெரிக்கா – ஸ்ரீலங்கா இணைந்த செயற்பாடுகளில் பங்குபற்றினார்கள். மேலும் 2006,2007 ஆண்டுகளில் மாத்திரமே வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளைப் பயிற்றும் திட்டத்தின் கீழ் அமெரிக்கா ஸ்ரீலங்காவின் 387 அதிகாரிகளை தங்களுடைய எத்தனையோ போர் பற்றிய பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் மாத்திரமல்ல Fort Bragg அமைந்த ஜோன் கென்னடி போர் கலை பற்றிய சிறப்பு பள்ளிகளிலும், அரிசோனாவில் இருந்த அமெரிக்காவின் இராணுவ உளவாய்தல் பற்றிய கலாசாலையிலும், அதேபோல் Fort Benning போர் நிலை யத்திலும் இரண்டரை மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியில் பயிற்சி கொடுத்தனர்.

2007 பகுதிகளில் தொடரும் மனித உரிமை மீறல்களும், அட்டூழியங்களும் சர்வதேசத்துக்கு வெளிவந்து கொண்டிருந்தன. அமெரிக்காவில் மட்டுமல்ல, சர்வதேசத்தின் பல தலைநகரங்களில் புலம்பெயர் தமிழ் மக்கள் கவனவீர்ப்பு போராட்டங்களுடன் அரசாங்கங்களுக்கு மகஜர்கள் கையளித்துக் கொண்டிருந்தனர். இந்தத் தேவையில்லாத - தொடரும் - போர்பற்றியும் அதன் அட்டூழியங்கள் குறித்தும் பல சர்வதேச அரசுகள் அங்கலாய்ப்புகொண்டன. ஆனால் அமெரிக்காவோ அந்த வருடம் ஸ்ரீலங்காவுடன் ஓர் இரகசிய இராணுவ ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது - அணுகலுக்கும் குறுக்கு சேவைகளுக்குமானவை என்ற பெயரில் (Access and Cross Servicing Agreement ACSA). இதன் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் தங்களுக்கு இந்தியப் பெருங்கடலில் பல கடல் வழிகளை அடைய உதவியும் ஆசியாவில் தாங்கள் நடத்தும் போர்களுக்கு (முக்கியமாக ஆப்கானிஸ்தான்) இராணுவ மார்க் கங்களையும் இந்தியாவின் வாசலில் இது ஏற்படுத்தும் என காங்கிரஸுக்கு அறிவிக்கப்பட்டது. இதைப்பற்றி இரண்டு நாடுகளுமே மௌனமாக இருந்தன. ஆனால் கசிய விடப்பட்ட தகவல்களிலேயே இவை வெளியாகின. அப்படி கசிந்த தகவல்களில் ஒரு பரிமாற்றத்தில் “இந்த ஒப்பந்தம் பற்றி வெளிவருவதை அமெரிக்கா விரும்பவில்லை. உங்களுக்கு (ஸ்ரீலங்காவிற்கு) நிர்ப்பந்தங்கள் இருந்து வெளியிட விரும்பினால் அதனை எதிர்க்கமாட்டோம். ஆனால் எந்த நேரத்திலும் அதனோடு இணைக்கப்பட்ட தகவல்களை (Annexures) வெளியே தரக்கூடாது” என சொல்லப்பட்டது.

**472.இவை உண்மைதானா? அமெரிக்கா மனித உரிமைகள் காரணமாக ஸ்ரீலங் காவுடனான இராணுவ உதவிகளையும் தொடர்புகளையும் முறித்து விட்டதாகத் தானே பொது வெளியில் கருதப்பட்டது?**

போரின்போது உண்மைகள் உறங்க, பொய்கள் பல மைல்கள் சவாரி செய்து விடும். திரும்பத் திரும்ப ஒரு பொய்யைச் சொல்லி அதனை உண்மையாக்கி விடலாம் என ஜேர்மனியின் ஜோஸப் கோயபல்ஸ் (Joseph Goebbels) சொன்னார். அமெரிக்கா காங்கிரஸில் சொன்ன அப்படியான செய்திகளை வெளியிட்டமை, தமிழ் ஆர்வலர்களிடம் அவற்றை உறுதிப்படுத்தி வற்புறுத்தியமை, அமெரிக்காவில் மதிப்பு வாய்ந்த ஊடகங்களில் அவற்றை ஆதரித்துக் கட்டுரைகளை எழுதி, பதிப்பிக்க செய்தியாளர்களை பணச் செலவில் அமர்த்தி அதனைப் பரப்புரை செய்தமை எல்லாம் ஒருபுறம் நடந்தன. மனித உரிமைகளை மீறி, போரில் மனித குலத்துக்கெதிரான செய்கைகளில் ஈடுபடக்கூடாது எனப் பகிரங்க அறிக்கைகளும் தந்து, பின்னர் பொதுமக்களை வெளியேற்ற கப்பல்கள் அனுப்ப யோசிப்பதாகவும் கூடப் பேசியது.




மே 2009இல் போரின் கடைசி நாள்களில் ஸ்ரீலங்கா இராணுவம் எதுவித வித்தியாசங்களுமின்றி பொதுமக்கள் அடைக்கலம் புகுந்த – ஆயுதங்கள் பயன்படுத்தப்படாத (No Fire Zone) பகுதிகள் என அரசாங்கமே ஏற்படுத்திய - இடங்களுக்குள் கனரக ஆயுதங்கள் பாவித்து கொண்டிருந்தார்கள். அமெரிக்கா தங்கள் கைவசம் இருந்த செயற்கை கோள் மூலம் பெறப்பட்ட படங்களை ஸ்ரீலங்கா அரசுடன் பகிர்ந்து போரின் முன்னேற்றங்கள்பற்றிதகவல்கள்அறிந்துகொண்டு இருந்தது. மே 5 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்தா, வெளிவிவகார அமைச்சின் காரி யதரிசி பாலித கோஹனா போன்றோருடன் நடத்திய சந்திப்பில் ஏப்ரல் 27 முதல் அன்று வரை எடுக்கப்பட்டுள்ள படங்களைக் காட்டி அவை மனித குலத்திற் கெதிரான செய்கைகளாகவும் யுத்த குற்றங்களாகவும் பார்க்கப்படும் என கரிசனை தெரிவித்தது. ஏனெனில் ஜனாதிபதி மஹிந்தா ஏப்ரல் 27 ஆம் திகதிதான் கனரக ஆயுதங்களை பாவிப்பது நிறுத்தப்பட வேண்டும் என உத்தரவிட்டிருக்கிறேன் என அறிவித்து இருந்தார். அந்த கரிசனைக்குப் பதிலாக படங்களை பார்த்துவிட்டு “என்னில் பார்க்க அவர்கள் மேலதிகமாக அறிந்துள்ளார்கள்.” எனச் சொன்னார் என கசிய விடப்பட்ட தகவல்கள் கூறின.

ஆகவே அமெரிக்காவுக்கு நடத்தப்பட்ட இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான செய்கைகள், போர்க்குற்றங்கள் என்ற எல்லாமே தெரிந்திருந்தது. ஆனால் அவையெல்லாம் ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து, போரை வென்று, விடுதலைப் புலிகளை அழித்து, அப் புறப்படுத்தி விடவேண்டும் என்பதில் மறைக்கப்பட்டு, தொடர்ந்து உதவிகள் செய்யப்பட்டன எனத் தீர்ப்பாயம் கருதியது.

போர்முடிந்த ஆறுமாதங்களின் பின் அமெரிக்க அதிகாரிகள் அறிக்கை ஒன்று “ஸ்ரீலங்கா போரின் பின்னான அமெரிக்க அணுகுமுறையில் கணிப்பு (SriLanka - Recharting US strategy after the war) அவர்களது செனேட் (senate) சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் அமெரிக்கா ஸ்ரீலங்காவை தங்களது ஆசியாவுக்கானபுதியவியூகங்களுக்காக இழந்துவிடக்கூடாது என்பதாவும் 2009 வரையிலும் அதன் பின்னும் ஸ்ரீலங்காவுடன் இணைந்த இராணுவ முன்னெடுப்புக்கள் திருகோணமலை பிரதேசத்தை சுற்றி நடத்தப்பட்டன எனவும் குறிப்பிடப்பட்டது. பொது மக்கள் சர்வதேசத்தில் அறிந்து கொண்டிராத பல வழிகளில் அமெரிக்கா ஸ்ரீலங்காவிற்கு போரை நடத்துவதற்கான உதவிகளை போரின் முழுக்காலங்களிலும் செய்தது. அமெரிக்காவின் மிகப் புகழ்வாய்ந்த சான்ட்ஹேஸ்ட் (Sandhust) இராணுவ கலைக்கூடத்தின் முன்னாள் விரிவுரையாளர் போல் மூர்கிராப்ட் (Paul Moorcraft) “அமெரிக்கா ஸ்ரீலங்கா அரசை இரவு நேரங்களில் பாரிய தாக்குதல்களை நடத்தும்படி ஊக்குவித்தார்கள். அப்படி அவர்களது வான்படை செய்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு நவீன இலக்கு நோக்கி தாக்குவதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன. அத்தோடு அவர்களின் ‘பசுபிக் பிராந்திய இராணுவக் கட்டமைப்பு’ தொடர்குண்டுகளை (Cluster Bombs) பாவிக்குமாறு அறிவுறுத்தியது” எனத் தெரிவித்தார்.

தீர்ப்பாயம் இப்படி தொடர்குண்டுகளால் பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களின் ஆதாரங்களை, அவை அப்படியனால் குண்டுகளால் ஏற்பட்டவை என்று கணக்கிட்டு ஆராய்ந்து ஏற்றுக் கொண்டது. அப்படியான தொடர்குண்டுகள் வானத்திலிருந்து போடப்பட்டதிற்கும் சாட்சியங்கள் தீர்ப்பாயத்தின் முன் இருந்தன.

இவை எல்லாவற்றின் ஆதாரங்களிலும் போரின் பின் 2010 இலிருந்து திருகோணமலையில் அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய இராணுவ தலைமையோடு தொடர்ந்தும் நடைபெறும் நடவடிக்கைகளில் இந்த அட்டூழியங்களில் அமெரிக்காவிற்கு மிகப்பெரிய பங்கு உள்ளது என தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது.

**473.பிரித்தானியா, இந்தியா பற்றி என்ன தீர்ப்புக்கள் தரப்பட்டன?**

இரண்டுமே இனப்படுகொலைக்கு ஆதரவாகவும் அதைவிட மனித குலத்திற்கெதிரான செயற்பாடுகளும் போர்க் குற்றங்களும் நடைபெறுகின்றன எனத் தெரிந்தும் அதனைத் தடுக்காமல் துணைபோயின என்று அபிப்பிராயம் தந்தது.



விரிவுரையாளர் மூர்கிராப்ட்

இந்தியாவை பொறுத்தவரை இந்திய கடல் பிராந்தியத்தில் தனது ஆளுமையை நிலைநிறுத்தி கொள்ளவும் அதற்கு சீனாவால் ஏற்படும் இடைஞ்சல்களையும் எதிர்நோக்க அமெரிக்கா எடுத்த வியூகத்தை அது பார்த்திருந்தது எனக் கருதியது. நோர்வேயில் இருந்து போருக்கு பின்னாக வந்த அவர்களது அறிக்கைகளில் “இந்தியா இந்தபோரை தங்களது மௌனத்தினாலேயே முன்னேற்றிச் சென்றது” என்ற அபிப்பிராயத்தைத்தான் தெரிவித்தார்கள்.

பிரித்தானியாவை பொறுத்தவரை அது தனது காலனித்துவ ஆட்சியின் நன்மைக்காக எப்படி இனங்களைப் பிரித்தும் இணைத்தும் கையாண்டு பின் சுதந்திரம் தரும்போது ஒரு நாடாக ஒற்றை ஆட்சியின் கீழ் விட்டுச் சென்று, ஸ்ரீலங்காவின் பிரச்சினைகளுக்கு மூல காரணமாக இருந்தது என்ற அபிப்பிராயங்களை விவரமாக கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையாக (Structural genocide) கருதியது.

அதற்கும் மேலாக போர்க்காலங்களில் பிரித்தானியா அளித்த ஆயுத உதவிகளையும் சர்வதேசத்தில் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத பட்டியலில் இட ஐரோப்பிய யூனியனுக்கு தந்த அழுத்தங்களையும் சுட்டிக்காட்டியது.

ஆனால் இவற்றின் விவரங்களை கட்டுரையின் நீளம் கருதி நீட்டாமல், பின்னணியில் முக்கியமாக இருந்த கதாநாயகரின் கதையை மாத்திரம் விவரமாகச் சொன்னேன்

(வளரும்)



கோயபல்ஸ்

# காக்கக் காக்க கனகவேல் காக்க......!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேன், ஆஸ்திரேலியா)

**[கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.]**

'கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும் கந்தனே உனை மறவேனே', ' கந்தன் திரு நீறணிந்தால் கண்டபிணி ஓடிவிடும்' என்று முருகன் அடியார்கள் தினமும் எண்ணி எண்ணியே முருகனை மனதார வழிபட்டு வருகிறார்கள் குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடமென்று அடியார்கள் கொண்டாடிப் போற்றுகின்றார்கள் எனலாம். கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக முருகனே விளங்குகிறார் என்று முருகன் அடியார்கள் பலரும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். 'வைதாரையும் வாழவைப்பான் முருகன் ' என்பது அவர்களது உறுதியான எண்ண மாகவும் இருக்கிறது.

கந்தக்கடவுள் எங்களின் சொந்தக் கடவுள் என்று என்னியே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வேலை வணங்குவதே வேலை என்றும் மனத்தில் இருத்தியும் வைத்திருக்கிறோம். வேலும் மயிலும் வேதனை போக்கிடும். சோதனை தீர்த்திடும் என்னும் நம்பிக்கை கந்தக் கடவுளைச் சொந்தக் கடவுளாய் நினைப்பவர்களிடம் நிறைந்தே இருக்கிறது. தெய்வங்கள் பல உண்டேனும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாய் காட்சி தருவது கந்தக் கடவுளேதான் என்பதை யாவரும் அகத்தில் அமர்த்தியே இருக்கிறார்கள். கருணைகூர் முகங்கள் ஆறு , கரங்கள் பன்னிரெண்டு கொண்டு உலகுய்ய திரு மேனி கொண்ட அருள் தெய்வமாய் கந்தக் கடவுள் விளங்குகிறார். அந்தக் கருணைக் கடல் ஏந்துவது வேல். அவரை ஏந்துவதோ மயில். வேல் என்றால் 'வெல்' என்பது தான் பொருள். வெற்றியை அளிப்பது தான் வேல். வேலைக் கரத்தில் தாங்கியதால் கந்தக் கடவுள் வேலவனாகி நிற்கின்றார். வென்று வெற்றியை உலகிலே தரக்கூடியது எது என்றால் அது 'ஞானந் தான்' ஞானத்தை அறிவு என்றும் சொல்லலாம். அறிவு என்பது செந்தமிழ்ச் சொல்லாகும். செந் தமிழ் முருகனின் கையிலுள்ள வேல் அறிவினது பூரணமான உருவம் என்றே சொல்லலாம். ஆழமாய், அகலமாய் கூர்மையாய் அறிவென்பது இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது முழுமையான அறிவாக அமையமுடியும். முருகன் கையில் வேலும் ஆழமாயும், அகலமாயும், கூர்மையாகவுமே இருக்கிறது அல்லவா! வேலவன் என்றால் பூரணமான அறிவின் இருப்பிடம் என்று தான் எண்ணிடத் தோன்றுகிறதல்லவா!

வேல் என்றாலே அது அஞ்ஞானத்தை அகற்றி வினையை வேரறுக்கும். ஆணவம் , கன்மம், மாயை என்னும் மும்மலங்களாய் உருப் பெற்று நின்றவர்கள்தான் சூரபதுமனும் அவனின் தம்பியருமான சிங்கமுகனும் , தாரகனுமாம். இவர்களைச் சாய்த்தது ஞானமாகிய வேல்தான். நான் என்னும் அகங்காரம் தலையெடுத்தால் அழிவு நிச்சயம் என்பதை சூரசம்ஹாரம் வெளிப்படுத்தி நிற்கிறது. வரம் பெறலாம். அதனால் உரமும் பெறலாம். வரமும் உரமும் கிடைத்த பின்னர் அதனை அறவழியில் பயன்படுத்தாமல் அறத்துக்குப் புறம்பான வழியிலே பயன்படுத்தினால் என்ன நேரும் என்பதையே சூரசம்ஹாரம் உணர்த்தி நிற்கிறது. கடும் தவத்தால் பெற்ற வாழ்வும் வளமும் தர்மத்தைத் துணையாக் காமல் இருந்த காரணத்தால் ஒழிந்தே போய் விட்டது. தர்மத்தை மதியாது நடந்து தலைகால் தெரியாது நடக்கும் பொழுது அதனைத் தடுக்க நிச்சயம் ஒரு சக்தி வந்தே நிற்கும். அந்தச் சக்திதான் கடவுள். அந்தக் கடவுளாய் வேலவன் வந்தார். வேலால் வென்றார். வினைகளை ஓட்டினார்.

வேலேந்தும் வேலவனை விளக்கும் வகையில் அமைந்ததுதான் கந்தபுராணம். கந்தபுராணம் என்றதும் எங்கள் நினைவில் வந்து நிற்பார் நல்லை நகர் ஆறுமுகநாவலர் பெருமான். கந்தபுராணத்தைச் சொந்தப் புராணம் என்று மனமிருத்தியவர் அவர். கோவில்கள் தோறும் கந்தபுராணத்தை பிரசங் கம் செய்து யாவரும் அறிய வேண்டும் என்று அரும்பணியாற்றினார். கந்தனது புராணத்தை மையப்படுத்தி 'கந்தபுராண கலாசாரம்' என்னும் சைவத் தமிழ் கலாசாரம் தோற்றம் பெற்றது மிகவும் முக்கிய விடயம் எனலாம். ஒரு கலாசாரமாக உருவாகி வருமளவுக்கு கந்தப் பெருமானின் மீதான பக்தி ஆழப்பதிந்து இருந்திருக்கிறது என்பது மனங்கொள்ளத்தக்க தேயாகும்.

கந்தப்பெருமையை மனமெண்ணி நிற்கின்ற அடியவர்கள் 'கந்தசஷ்டி விரதத்தை' வாழ்விலே பெரும் விரதமாகவே கொண்டிருக்கிறார்கள். கந்த சஷ்டி வருவதை உன்னிப்பாய் கவனித்த படியும் இருப்பார்கள். இந்தியா , இலங்கை எங்கணும் இருக்கின்ற கந்தனது அடியார்கள் கந்தசஷ்டியைக் கண்ணுங் கருத்துமாய் கடைப்பிடித்தே வருகிறார்கள். கந்தசஷ்டி என்றதும் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நல்லைக் கந்தனே வந்து நிற்பார். நல்லைக்கந்தன் சந்நிதானத்தில் பல அடியார்கள் கந்த சஷ்டி காலங்களில் கந்தனின் பூசையைக் கண்டு அங்கு கொடுக்கும் தீர்த்தத்தை மட்டுமே பருகி ஆறு தினங்களுமே எதுவுமே சாப்பிடாமல் விரதம் அனுட்டிப்பார்கள் என்பது முக்கியமாகும். நல்லூர் வரமுடியாத அடியார்கள் தங்கள் வீட்டிலேயே கடும் விரதமாய் இருப்பார்கள் இன்றும் பலர் விரதத்தை விடாமல் அனுட்டிக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். யாழ்ப்பாணத்தில் பலர் பல வருடங்களாகவே இடைவிடாது தொடர்ந்து கந்தசஷ்டி யைக் கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதும் மனங்கொள்ளத் தக்கதேயாகும். நீரை மட்டும் அருந்துவர் சிலர். மாலையில் பாலை மட்டும் பருகுவர் சிலர். பாலையும், ஒரு பழத்தையும் மாலையில் எடுப்பாரும் இருக்கிறார்கள். முதியவர்கள் மட்டுமன்றி இளைஞர்களும் கூட கந்தசஷ்டியை பக்தி பூர்வமாகக் கடைப்பிடிக்கிறார்கள் என்பது மனங்கொள்ளத்தக்க தேயாகும். கந்த சஷ்டி நோற்கும் காலங்களில் யாவருமே கந்த சஷ்டி கவசத்தைப் பாராயணம் செய்வார்கள். கோவில்களில் விரதமிருக்க அடியார்கள் யாவரும் ஒன்று சேர்ந்து பாடுவதற்கு வசதியாக கந்த சஷ்டி கவசத்தை ஒலி பெருக்கி மூலம் ஒலிபரப்பும் வழக்கம் இடம் பெற்றும் வருகிறது. கந்த சஷ்டி கவசத்தை மனனம் செய்யாமல் இருப்பவர்களுக்கு இப்படிச் செய்வது மிகவும் பொருத்தமாய் அமைகிறது.

ஆனால் பெரும்பாலானவர்கள் கந்த சஷ்டி கவசத்தை மனப்பாடம் செய்தே வைத்திருப்பார்கள். கந்தப் பெருமானை மனமெண்ணிப் பாடும்பொழுது அப்பாடல் எங்களுக்கெல்லாம் மிகவும் சிறந்த பாதுகாப்புக் கவசமாய் அமைகிறது என்பதால்தான் அப்பக்தி துதிக்கு 'கந்த சஷ்டி கவசம்' என்று பெயர் அமைந்ததோ என எண்ணிடத் தோன்றுகிறது.

கந்தசஷ்டி கவசம் இலகுவான மொழிநடையில் அமைந் திருக்கிறது. இசையுடன் பாடவும் பொருத்தமாய் அமைந்திருக்கிறது. கந்தசஷ்டி கவசத்தைப் பலரும் மனப்பாடம் செய்து வைத்திருந்தாலும் அதில் பொதிந்திருக்கும் தத்துவத்தைப் பெரிதும் கண்டுகொள்ளுவதே இல்லை. கந்தசஷ்டி கவசத்தை உன்னிப் பாய் கவனித்தால் அதில் பொதிந்திருக்கும் பொக்கிஷங்களைக் கண்டு கொள்ளலாம். அவற்றை மனமிருத்துதல் வாழ்க்கைக்கு அவசியமாகும். பக்திப் பாடல்கள் பாடப்படுவதால் மனதில் நல்ல மாற்றங்கள் ஏற்படுகின்றன. சாதாரண பாடல்களும் தருகின்ற இன்பம் வேறு. அந்தப் பாடல்களால் ஏற்படும் உளநலம் வேறு. சாதாரண பாடல்கள் பார்க்கும் பார்வை வேறு. பக்திப்பாடல்கள் பார்க்கும் பார்வை வேறு. அந்த வகையில் கந்தசஷ்டி கவசம் தருகின்ற பொருள்கள் உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக்கவும், உறுதிப்படுத்தவும், நல்லுணர்வுகளை ஏற்படுத்தவும் உறுதுணையாகி நிற்கின்றன என்பதை யாவரும் மனமிருத் துதல் அவசியமாகும்.

**நீறிடு நெற்றியும் நீண்ட
புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்
செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச்
சுட்டியும்
ஈராறு செவியில் இலகு
குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய
மார்பில்
பல்பூணமும் பதக்கமும்
தரித்து**



**நன்மணி பூண்ட நவரத்ன
மாலையும்
முப்புரி நூலும் முத்தணி
மார்பும்
செப்பழகுடைய திருவயிறு
உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்
பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணை
முழந்தாளும்
திருவடியதனில் சிலம்பொலி
முழங்க**


என்று கந்தப்பெருமானைக் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தி விட்டுத்தான் கந்தசஷ்டிகவசம் தன்னுடைய தத்துவங்களைத் தந்து நிற்கிறது. போர் புரிபவர்கள் எதிரியிடமிருந்து வருகின்ற படைக்கலங்களின் பாதிப்பிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள அணிவது தான் 'கவசம்'. அது சாதாரண கவசம். இதுவோ 'கந்தசஷ்டி கவசம்'. அகப்பகை, புறப்பகை எதுவுமே எம்மைத் தாக்கிடா வண்ணம் காத்திடவல்லதாகும். கந்தனது வேல் ஞானத்தின் பேருருவம். அந்த ஞானத்தின் துணைமட்டும் வாய்த்து விட்டால் வந்தவினையும், வருகின்ற வல்வினையும் வந்தவழியே ஓடி ஒழிந்தே விடும்.

அடியேன் வதனம்
அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப்
புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும்
கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப்
பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை
இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள்
வளம் பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல், வயிற்றை
விளங்குவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை
அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும்
பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள்
கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும்
கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின் கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில்
அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க

எத்தனை வேல்கள்! அத்தனை வேல்களும் வெறும் பெயர்களல்ல. எத்தகைய கொடிய பகைகளையும் எம்மிடத்து வாராமல் காத்து நிற்கும் கருணைநிறை வேல்கள்!

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# சுமந்திரன் குழு அமெ. செல்வதில் தவறேதுமில்லை!



## மனம் திறக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி.

"அமெரிக்காவுடன் பேசுவதற்கு தமிழரசுக் கட்சி பிரமுகர்கள் செல்வதில் எந்தத் தவறும் இல்லை. இதில் எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியோ அல்லது பொறாமையோ இல்லை. எந்தப் பின்னணியில் எவர் பேச்சுக்குச் சென்றாலும் எமது மக்களின் அரசியல் தீர்வு தொடர்பிலான நிலைப்பாடுகளை அவர்கள் செல்லும் இடங்களில் தெளிவாக வலியுறுத்தும் வரையில் எனது ஆதரவு அவர்களுக்கு இருக்கும். அவர்கள் அவ்வாறு வலியுறுத்துவதால் முரண்பாடுகள் எதுவும் ஏற்படப் போவதில்லை."

- இவ்வாறு கூறியிருக்கின்றார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

வாரத்துக்கொரு கேள்வி என்ற தலைப்பில் தாம் அனுப்பும் 'ஊடகவியலாளர் கேள்வி - பதில்' அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதன் முழு விவரம் வருமாறு:-







**கேள்வி:-** அமெரிக்காவுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கு அமெரிக்காவுக்கு செல்வதற்கு ஏனைய கட்சிகளை தவிர்த்து தமிழரசுக் கட்சி சார்பில் மூன்று பேரை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் நியமித்திருப்பது பற்றிய உங்கள் கருத்து என்ன? அண்மையில் பல தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடி 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கோரியதற்கும் தமிழரசுக் கட்சியின் அமெரிக்க விஜயத்துக்கும் ஏதாவது தொடர்பு அல்லது முரண்பாடு இருப்பதாக நீங்கள் கருதுகின்றீர்களா?

**பதில்:-** இந்த கேள்விக்கு நான் மிகவும் சுருக்கமான பதிலையே அளிக்க விரும்புகின்றேன். அதற்கு முன்னர் இவை பற்றிய பின்னணியை ஆராய்ந்தால் சாலச் சிறந்தது என்று கருதுகின்றேன். அண்மையில் தமிழ்க் கட்சிகள் பல யாழ்ப்பாணத்தில் கூடி 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியாவை கோருவதற்கு மேற்கொண்ட முடிவு எந்த விதத்திலும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வின் அடிப்படையிலானது என்று கொள்ளக் கூடாது.

13 ஆவது திருத்த சட்டம் 1987 ஆம் ஆண்டு இந்திய தலையீடு காரணமாக இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒன்று. இது இலங்கையின் ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஓர் அதிகார பரவலாக்கமே அன்றி அதிகாரப் பகிர்வு அல்ல. இனப்பிரச்சினைக்கு தீர்வாக நாங்கள் கோருவருவது மத்தியில் இருந்து (மீளப்பெறமுடியாதவாறு) அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி கட்டமைப்பையே ஆகும். பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் தற்போது எமது அரசியல் யாப்பின் ஓர் அங்கம். சட்ட ரீதியாக அரசியல் யாப்பின் ஓர் அங்கமான இந்தத் திருத்தச் சட்டத்தின் ஊடாக தமிழ்ப் பேசும் மக்களுக்கு கிடைக்கவேண்டிய முழுமையான அதிகாரத்தை எமக்கு தருமாறு இலங்கை அரசாங்கத்திடமும் இந்திய அரசாங்கத்திடமும் வலியுறுத்தும் உரிமை எமக்கு இருக்கின்றது. இந்தச் சட்டத் திருத்தத்தின் கீழ் எமக்கிருக்கும் முழுமையான அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் தார்மீகக் கடமையும் பொறுப்பும் இந்தியாவுக்கு இருக்கின்றது. 13 ஆவது திருத்த சட்டம் 1987 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அன்றே இது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு அல்ல என்று திட்டவட்டமாக தமிழ் அரசியல் தலைமைகளினால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இந்த 13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ் நாம் விரும்பியோ விரும்பாமலோ அரசியல் செய்து வந்துள்ளோம்.

நான் முதலமைச்சராகப் பதவி வகித்ததும் பலவீனப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ்த் தான். நான் முதலமைச்சராக பதவி வகித்தபோதே 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறும் பொலிஸ் அதிகாரம் உட்பட எல்லா அதிகாரங்களையும் எமக்கு வழங்குமாறும் நான் வலியுறுத்தி வந்தேன். ஏனென்றால், சட்ட ரீதியாக இந்த அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வது எமது உரித்து.

அதேவேளை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது 13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ் எமக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தேன். நரேந்திர மோடி அவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது கூட்டுறவு சமஷ்டியின் அவசியம் பற்றி வலியுறுத்தி இருந்தார். ஆகவே, இந்தியா கூட இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு 13 ஆவது திருத்தம் ஒரு தீர்வு அல்ல என்ற யதார்த்தத்தை உணர்ந்துள்ளதாகவே நான் காண்கின்றேன்.

இன்று எம் மீது பாரிய ஓர் இனஅழிப்பு மேற்கொள்ளப்பட்டு வரும் ஓர் ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஒரே நாடு; ஒரே சட்டம் என்ற அரசாங்கத்தின் திட்டம் தமிழ் பேசும் மக்கள் மீதான மற்றொரு முள்ளிவாய்க்கால் அன்றி வேறு எதுவும் இல்லை. இதுவே உண்மை. இதனை நாம் வெற்றிகரமாக முறியடிக்க வேண்டிய போர்க்களத்தில் நிற்கின்றோம். எமது கண்களுக்கு முன்பாக ஏற்கனவே நாளாந்தம் பல ஏக்கர் காணிகளை நாம் இழந்துவருகின்றோம். இந்த ஆபத்தில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள கையில் இருக்கும் எந்த ஒரு துரும்பையும் எமது தற்பாதுகாப்புக்காக நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். கையில் இருக்கும் எந்த ஒரு தற்காப்புக் கருவியையும் இழந்து நிர்க்கதியாக நிற்கும் ஒரு நிலைமையை நாம் ஏற்படுத்திவிடக் கூடாது. ஒரு புறம் ஒரே நாடு; ஒரே சட்டம் என்ற சட்ட மறுசீரமைப்பின் ஊடாக நாம் ஒரு தேசம் என்று எம்மை கூறுவதற்கு காரணமாக இருக்கும் சட்ட ரீதியான, வரலாற்று ரீதியான, கலாசாரரீதியான, பாரம்பரிய ரீதியான எமது அடிப்படைகளை நிர்மூலம் செய்யும் கைங்கரியங்கள் அரங்கேறிவரும் வேளை, மறுபுறத்தில், புதிய அரசியல் அமைப்பின் ஊடாக 13 ஆவது திருத்த சட்டத்தின் ஊடாக எமக்கு கிடைக்கும் சில அதிகாரங்களையும் இல்லாமல் செய்யும் சூழ்ச்சியும் நடைபெறுகின்றது. அதேவேளை, வடக்கு - கிழக்கை ஒரு லட்சத்துக்கும் அதிகமான இராணுவம் ஆக்கிரமித்துள்ள நிலையில் முதலையின் வாயின் முன்னால் உள்ள இரையாக நாம் வாழ்கின்றோம். ஒவ்வொரு 6 தமிழ் மக்களுக்கும் 1 இராணுவ வீரன் என்ற அளவில் வடக்கு - கிழக்கின் இராணுவ மயமாக்கல் இருக்கின்றது. முல்லைத்தீவில் இந்த நிலைமை 2 பொது மக்களுக்கு 1 இராணுவ வீரன் என்ற விகிதத்தில் மோசமாக இருக்கின்றது. எமது கண்களுக்கு புலப்படாமல் எமது அடர்ந்த காடுகளுக்குள் பாரிய இராணுவக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. எமது ஒவ்வொரு அசைவும் கண்காணிக்கப்படுகின்றது. இவை எல்லாம், எமது பாரம்பரிய வாழ்விடங்கள், கலாசாரம், வாழ்வு, அடையாளம் ஆகிய எல்லாவற்றையுமே இல்லாமல்செய்யும் இனஅழிப்பு நடவடிக்கைகளே அன்றி வேறு எவையும் இல்லை.

இந்த இனப்படுகொலை மற்றும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் இருந்து தமிழ் மக்களை காப்பதற்கு பாதுகாப்பதற்கான பொறுப்பு (Responsibility to Protect/R2P ) என்ற ஐக்கிய நாடுகள் கோட்பாட்டை பிரயோகம் செய்ய வேண்டிய கடப்பாடு சர்வதேச சமூகத்துக்கு இருக்கின்றது. எந்த ஓர் இடத்திலும் இனப்படுகொலை அல்லது இன சுத்திகரிப்பு நடைபெறும் அல்லது நடைபெறுவதற்கான சூழ்நிலைகள் இருக்கும்பொழுது அவற்றில் இருந்து பொதுமக்களை முன்கூட்டியே பாதுகாக்கும் சர்வதேச சமூகத்தின் பொறுப்பை R2P கோட்பாட்டின் முதலாவது பொறுப்பான Responsibility to Prevent வலியுறுத்துகின்றது. வடக்கு, கிழக்கில் நிலைமைகள் எதனையும் நான் மிகைப்படுத்தி கூறி, எம்மை இனப்படுகொலை மற்றும் இனச்சுத்திகரிப்பில் இருந்து பாதுகாக்கும் சர்வதேச சமூகத்தின் Responsibility to Prevent பொறுப்பை நான் வலியுறுத்தவில்லை. இதுதான் யதார்த்தம். நிலைமைகள் நாளுக்கு நாள் இங்கு மோசமடைந்து வருகின்றன.

இந்த Responsibility to Protect தலையீட்டை தலைமை ஏற்று முன்னெடுக்கும் எல்லா தகுதிகளும் இந்தியாவுக்கு வரலாற்று ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும், இந்திய - இலங்கை ஒப்பந்த ரீதியாகவும் இருக்கின்றது. ஆகவே, இலங்கையில் தமிழ் மக்களை பாதுகாப்பதற்கு இந்தியா முறையானதும் வினைத்திறன் மிக்கதுமான ஒரு தலையீட்டாளர் (Effective and legitimate intervener) ஆகும்.

இன்று பாரிய இனஅழிப்பு ஒன்று கட்டவிழ்த்துவிடப்படுவதற்கான எல்லா அறிகுறிகளும் தெளிவாகத் தென்படுகின்றன. காணிகள் பறிபோகின்றன, வாழ்வாதாரங்கள் பறி போகின்றன, எமது வளங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன, சிங்களக் குடியேற்றங்கள் துரிதமாகத் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றன. போரின் பின்னர் படையினர் தொடர்ந்தும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் குடிகொண்டு வருகின்றார்கள். மீனவர், விவசாயிகள், சிறுகைத் தொழிலாளர்கள் பாடு வருந்தத்தக்கதாய் இருந்து வருகின்றது. நாம் ஆபத்தில் இருக்கின்றோம். ஆகவே கால தாமதம் இன்றி எதிர்வரும் சில மாதங்களுக்குள் இந்தியா இது தொடர்பில் காத்திரமான தலையீட்டை மேற்கொள்ள வேண்டும் என்பது எமது விருப்பம்.

அதேவேளை, 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு நாம் கூட்டாகக் கோருவது அதனை நாம் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்வதாக அர்த்தப்படுத்தப்பட்டுவிடும் என்று வெளிநாடுகளில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் பலர் கவலை வெளியிட்டுள்ளனர். அவர்களின் கவலையை என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது. நீர்த்துபோகச்செய்யப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் இருந்தும் எமது வடக்கு - கிழக்கு தாயகத்தில் பல ஆயிரம் ஏக்கர் நிலத்தை நாம் பறிகொடுத்துள்ளமையும் பல சிங்களக் குடியேற்றங்கள்

**10 ஆம் பக்கம் பார்க்க...**

# நாடாளுமன்றில் லொஹான் தகாதவார்த்தைப் பிரயோகம்

எதிரணியினருடன் ஏற்பட்ட காரசாரமான விவாதத்தில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவை அமைதிப்படுத்தும் வகையில் செயற்பட்டார்.

உர விவகாரம் தொடர்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் எதிர்கட்சியினருடன் காரசாரமான விவாதம் இடம் பெற்றது.

அமைச்சருக்கு அருகில் அமர்ந்திருந்த லொஹான் ரத்வத்த எதிரணியினரை நோக்கி கூச்சலிட்டமையுடன் கெட்டவார்த்தையை பயன்படுத்தியிருந்தார்.

இதன்போது அருகில் இருந்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, ரத்வத்தவின் தலையில் கைகளை வைத்து அவரை அமைதிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

இருப்பினும் கோபத்தில் மீண்டும் மீண்டும் கடும்சொற்பிரயோகங்களை மேற்கொள்ள



இராஜாங்க அமைச்சரைக் கட்டுப்படுத்த மஹிந்தானந்த அளுத்கமகே பல முயற்சிகளை மேற்கொண்டார்.

லொஹான் ரத்வத்த சிறைச்சாலையில் கைதிகளை மண்டியிடவைத்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மின்சார விநியோகம் பல பகுதிகளில் தடை

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பல பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை முதல் கிட்டத்தட்ட 2 லட்சத்து 20 ஆயிரம் பேர் மின்சாரம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மேல், தெற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மின்வெட்டு பதிவாகியுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

மேலும் சேவையை வழமைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என மின்சக்தி அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் சுலக்‌ஷன் ஜயவர்தன குறிப்பிட்டார்.

## கந்தசஷ்டி சிறப்புப் பிரார்த்தனை



# பண்ணானாய் பாட்டானாய் பார்காப்பாய் வேல்முருகா!

**நாளாகிக் கோளாகி நன்மையாய் உண்மையாய்
வாணாளில் பேரொளியாய் வந்தமைந்தாய் மால்முருகா
தேனாக இருப்பவனே தெவிட்டாத தெளமுதே
வானோரை மீட்டவனே மனுக்குலத்தைக் காத்திடப்பா**

**செருக்குற்றார் செருக்கடகி சேவித்து அருளியவா
அருட்கடலை அவரடைய அருட்காட்சி புரிந்தவா
தருக்கிடுவார் செருக்குடையார் தலகுனியார் பலருள்ளார்
அவரகத்தில் நற்கருணை அமர்த்திவிடு அரன்மைந்தா**

**விண்ணுலகும் மண்ணுலகும் வியாபித்து நிற்பவனே
விதந்தேத்தும் அடியாரின் மனமதிலே உறைபவனே
கண்ணுக்குள் மணியானாய் கருவுக்குள் ஒளியானாய்
பண்ணானாய் பாட்டானாய் பார்காப்பாய் வேல்முருகா**

**பசித்திருந்து விழித்திருந்து பக்குவமாய் நோன்பிருப்பார்
பாரிருப்பார் பலரிருப்பார் பார்த்திடுவாய் வேல்முருகா
பழித்திருப்பார் பறித்தெடுப்பார் பக்திதனை இகழ்ந்திடுவார்
பார்பராவ வழிசமைப்பாய் பார்வதியின் பாலகனே**

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேன் – ஆஸ்திரேலியா

# சீரற்ற காலநிலையால் இதுவரை 11 பேர் சாவு

*நாட்டில் ஏற்பட்டுள்ள மழையுடனான வானிலை காரணமாக ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களில் சிக்குண்டு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது.*

*இதற்கமைய இயற்கை அனர்த்தங்களால் கடந்த 27 ஆம் திகதி முதல் நேற்று (செவ்வாய்க்கிழமை) வரை 11 பேர் உயிரிழந்துள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.*

*அத்துடன், 5 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.*

*மேலும் 16 மாவட்டங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 167 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

# எரிபொருள் விலைகள் எகிறக்கூடாது என்பதே எனது நிலைப்பாடு ஆகும்

## நிதி அமைச்சே தீர்மானிக்கும் என்கிறார் கம்மன்பில



எரிபொருள் விலையை அதிகரிப்பதா இல்லையா என்பது தொடர்பாக நிதி அமைச்சரால் தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போது மண்ணெண்ணெய்க்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 77 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவித்தார்.

மேலும் சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் விலைகளில் பாரிய வேறுபாடு இருப்பதால் மண்ணெண்ணெயை பயன்படுத்த மக்கள் முன்வந்துள்ளனர் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இவ்வாறு மக்கள் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படக் கூடாது என்பதே தனது நிலைப்பாடு என்றும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நிதி அமைச்சருக்கே இருக்கிறது என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

# காக்கக் காக்க....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நம்மை என்றுமே வாழ்வில் காத்துமே நிற்கும் என்னும் நம்பிக்கையை நம்மனத்தில் ஊன்றும் வகையில் கந்தசஷ்டி கவசம் அமைந்திருக்கிறதல்லவா! எங்களது உடம்பில் உள்ள அத்தனை பகுதிகளும் எந்தவிதமான பாதிப்பும் இன்றிக் காக்கப்பட வேண்டும் என்று – அந்த வேலவனிடம் வேண்டுகோள் விடுக்கும் முறையும் கந்தசஷ்டி கவசத்தின் சிறப்பாக அமைகிறது அல்லவா! உடம்பின் ஒவ்வொரு பாகமும் காக்கப்பட வேண்டும் என்னும் சிந்தனையும், அந்தச் சிந்தனையை வெளிப்படுத்தும் பாடல்களின் வரிகளும், பாடல் வரிகளின் நிறைவில் 'காக்க' என்று அமைவதும் – உள்ளத்தை நலப்படுத்துகிறது , உடலை நலப்படுத்துகிறது. 'காக்க' என்பதும் சிறந்த மந்திரமாய் அமைகிறதல்லவா! இந்த வரிகளைப் பாடும் பொழுது – தியானத்தில் இருப்பதுபோன்ற ஓர் உணர்வு நம் முள் ஏற்படுகிறது அல்லவா! திரும்பத் திரும்ப இந்த வரிகளை வாய் உச்சரிக்க – எம்மை அறியாமலேயே எம்முள் ஒரு சக்தி உட்புகுவதை நாம் அனுபவித்தால் அறிவோம். பில்லி, சூனியம், பெரும்பகை, வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள் அல்லற்படுத்தும் அடங்கா முனி, பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனி, கொள்ளிவாய்ப் பேய்கள், குறளைப் பேய்கள் பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதர், அத்தனையும் கந்தசஷ்டி கவசத்தின் ஒலி கேட்டவுடன் உருக்குலைந்தே போய்விடும் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தாகும். பில்லி , சூனியம் என்பது இன்றும் கிராமப்புற மக்களின் மனதில் குடியிருக்கும் பயமாகும். நவநாகரிகத்தில் இவை மூட நம்பிக்கையாய் இருக்கலாம். ஆனால் – பில்லி, சூனியம் என்பதை 'எம்மை விடாது பிணித்திருக்கும் கொடியவினை' என்று கருதிவிட்டால் கருத்து மனம் அமரும் அல்லவா!

புலியும், நரியும் ,புன்னரி நாயும், எலியும் கரடியும், கிட்டவராது ஓடிவிடும். தேளும்,பாம்பும், செய்யான், பூரான், கடிப்பதால் வரும் விஷங்களும், அதனால் ஏற்படும் கடித்துயரங்களும் இறங்கிவிடும். அதுமட்டுமல்ல ஒளிப்பும், சுளுக்கும், ஒரு தலை நோயும், வாதம் சயித்தியம், வலிப்பு, பித்தம், சூலை, சயம், குன்மம், சொக்குச் சிரங்கு குடைச்சல், சிலந்தி, குடல்விப்பிரிதி, பக்கப் பிளவை, படர் தொடை வாழை, கடுவன் படுவன், கைத்தாள் சிலந்தி, பற்குத்து அரணை, பருஅரை யாப்பும், ஆகிய பிணிகள் எல்லாம் எம்மை விட்டு அகன்றே விடும் என்று கந்தசஷ்டி கவசம் – வாழ்வியலுக்குப் பெருந்துணையை வழங்கி நிற்கிறது. எங்களுக்கு வருகின்ற நோய்கள் அத்தனையும் வரிசைப் படுத்திக் காட்டியிருக்கும் பாங்கை வியக்காமல் இருந்திடவே முடியாது. அதுமட்டுமல்ல விஷங்களைக் கொட்டி உயிராபத்தை தருகின்ற அத்தனை ஜந்துக்களின் பெயர்களையும் வரிசைப்படுத்தி பாங்கு – ஒரு சிறந்த விக்கடி வல்லுநரையே மனத்தில் கொண்டுவந்து நிறுத்துகிறது எனலாம்.

எங்களுக்கு மனத்துயரங்கள், ஆபத்துகள், ஏற்படுகின்ற தருணத்தில் , எங்கள் உறவுகள் நோயால் அல்லது வேறு துன்பத்தால் அல்லல்படுகின்ற வேளையில் எல்லாம் நாங்கள் 'கந்தசஷ்டி கவசத்தை' சொல்லியபடி இருப்போம். அப்படி நாங்கள் இருப்பதற்கு அடிப்படையே – ஆபத்திலிருந்து அல்லலிருந்து நிச்சயம் காப்பாற்றப்பட்டுவிடலாம் என்னும் அசையாத நம்பிக்கையே எனலாம். இன்றும் இதனைப் பலரும் செய்கிறார்கள், செய்துகொண்டுதான் இருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை எனலாம். இதனை வலியுறுத்தி, மனத்தில் நல்ல நம்பிக்கை தரும் வகையில் கந்தசஷ்டி கவசத்தின் முதல் துதியே உறுதி பயந்து நிற்பது ஐயத்தைப் போக்கி அணைப்பதாய் அமைகிறதல்லவா!

'துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்–கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை'

கந்தசஷ்டி கவசத்தை ஓதுங்கள் ! ஓதியபடி இருங்கள் என்பதற்குச் சான்றாக வருகின்ற இக்கருவினை மனமிருத்தல் அவசியமேயாகும்.

காசினியிற் றுன்பகலக் கந்தனருள் பெற்றுயர
மாசில்லாச் சீரெய்த மாமனையும் – பேசுதிரு
காதலரும் பெற்றுவக்க கந்தர் கவசத்தை
ஓத வௌரும் உவந்து

நிறைவில் எல்லாவற்றையும் அளிக்கின்ற வேலினை வணங்குவோம். அந்த வேலினைக் கையேந்தும் வேலவனையும் வணங்குவோம். கந்தசஷ்டி கந்தனை மனமிருத்தும். கந்தனை அருகழைக்கும் !

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல் – வாரி என்று

பிரார்த்தித்து பேராணந்தப் பெருவாழ்வு பெறுவோம்!

# மன்னார் மாவட்டத்தில் கடந்த 8 நாள்களில் 154 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம்

## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 154 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் நேற்று (செவ்வாய்க்கிழமை) விடுத்துள்ள கொரோனா நிலைவர அறிக்கையில் இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் -

மன்னார் மாவட்டத்தில் மேலும் புதிதாக 26 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த 7 ஆம் திகதி மன்னாரைச் சேர்ந்த 55 வயதுடைய நபர் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.

மாவட்டத்தில் இந்த வருடம் 2,530 கொரோனாத் தொற்றாளர்களும் தற்போது வரை 2 ஆயிரத்து 547 கொரோனாத் தொற்றாளர்கள் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுமந்திரன் குழு அமெ. செல்வதில் தவறேதுமில்லை!

## மனம் திறக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி.

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தப்பட்டுள்ளமையும் உண்மை. அதேபோல, 13ஆவது திருத்தச் சட்டத்தை நாம் பயன்படுத்தி பறிக்கப்பட்ட சில நிலங்களை நாம் மீட்டுள்ளமையும், அபகரிக்கப்படவிருந்த பல ஆயிரம் ஏக்கர் காணிகளைப் பாதுகாக்க முடிந்துள்ளமையும் சிறிய அளவிலேனும் எமது மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகளை நாம் செய்ய முடிந்துள்ளமையும் உண்மை என்பதை எம் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, அரைகுறை என்றாலும், நாம் எமது கைகளில் தற்போது இருக்கும் அதிகாரத்தை இழந்து விடாத வகையில் செயற்படவேண்டும், அதேவேளை, எமக்கு கிடைக்கவேண்டிய முழுமையான அதிகாரத்தையும் எவ்வாறு பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சிந்தித்து செயலாற்ற வேண்டும். ஆகவேதான், ஏற்கனவே அரசியல் அமைப்பில் இருக்கும் 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இந்தியாவைக் கேட்க விழை கின்றோம். கேட்பதில் எந்தத் தவறும் இல்லை என்பது எனது கருத்தாக இருக்கின்றது.

நான் மீண்டும் வலியுறுத்துவது என்னவென்றால், 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு நாம் இந்தியாவைக் கோருவதை நாம் எமது சுயநிர்ணய உரிமையினைக் கைவிட்டு, சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டு, 13 ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக ஏற்றுக் கொள்வதாக அர்த்தப்படுத்தக்கூடாது. 13 ஆவது திருத்தச் சட்டம் ஏற்கனவே எமது சட்ட ஏடுகளில் பொறிக்கப்பட்டிருக்கும் ஒற்றையாட்சி அரசியல் யாப் பின் கீழான ஏற்பாடுகள். எமது நிரந்தரத் தீர்வு வேறு திசை நோக்கிச் சென்று பெற வேண்டிய ஒன்று. நான் முன்னர் குறிப்பிட்டபடி, 1987 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையில் 13 ஆவது திருத்தம் இலங்கை அரசமைப்பில் இருக்கின்றது. இருக்கும் போது எமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் 2009ஆம் ஆண்டுவரை ஆயுதரீதியாக முன்னெடுக்கப்பட்டு, அதன் பின்னர் அரசியல் ரீதியாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோல, இன அழிப்புக்கான நீதியைப் பெற்றுக்கொள்ளும் தமிழ் மக்களின் போராட்டமும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் இன அழிப்புக்கான நீதியை பெறுவதற்கும் நாம் எடுக்கும் பிரயத்தனங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகின்றேன்.

எம்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இனப்படுகொலையில் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ளும் தற்காப்பு உத்தியாக எமது கைகளில் இருக்கும் சட்ட ரீதியான 13 ஆவது திருத்தத்தை எவ்வாறு சாதுரியமாகப் பயன்படுத்தலாம் என்பதே நடைபெற்ற கலந்துரையாடல்களின் சிந்தனை ஆகும்.

வட- கிழக்கில் நடைபெறும் திட்டமிட்ட குடியேற்றங்கள், பௌத்தமயமாக்கல்களை முடிந்தளவுக்கு எதிர்ப்பதற்கும், தடுப்பதற்கும் தேர்தல்களை தட்டிக் கழித்து தனது சிங்கள - பௌத்த இனம் சார்ந்த தேசிய கொள்கைகள், சட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை சில கைக்கூலி தமிழ் அரசியல்வாதிகளை பயன்படுத்தி மத்திய அரசாங்கம் அமுல்படுத்துவதை தடுப்பதற்கும் எதிர்ப்பதற்கும், வேலை இல்லாமல் இருக்கும் எமது மக்களை தவிர்த்து சிங்கள மக்களுக்கு எமது பிரசதேசங்களில் வழங்குவதை தடுப்பதற்கும், திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் சமூக விரோதச் செயற்பாடுகள், போதைப்பொருள் பாவனை ஆகியவற்றில் இருந்து எமது இளைய சமூகத்தை காப்பாற்றுவதற்கும், ஓரளவுக்கேனும் சட்டம் ஒழுங்கை பேணுவதற்கும், வீழ்ச்சியடைந்த எமது கல்வியை முடிந்தளவுக்கு மீள கட்டியெழுப்புவதற்கும், போரினாலும் மற்றும் கொரோனாவினாலும் நலிவடைந்து நிற்கும் எமது மக்களின் வாழ்வை மீள கட்டியெழுப்புவதற்கு எம்மாலான சில திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சட்டத்தில் இருக்கும் 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான இந்தியாவின் கடப்பாட்டையும் பொறுப்பையும் வலியுறுத்துகின்றோம். அதேவேளை, இந்த அதிகாரங்களை வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மத்தியின் இடையூறு எதுவும் இன்றி அர்த்தம் உள்ள வகையில் பிரயோகிக்கமுடியும் வகையிலான உரிய உத்தரவாத ஏற்பாடு ஒன்றையும் இந்தியா ஏற்படுத்தி தருவதுடன், ஒற்றை ஆட்சிக்கு உட்படாத ஒரு சமஷ்டி அடிப்படையிலான நிலையான தீர்வினை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதும் எமது எதிர்பார்ப்பு.

இனி நீங்கள் கேட்ட கேள்விக்கு வருகின்றேன். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் உட்பட சர்வதேச சமூகத்துடன் தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைகளிலும் இராஜதந்திர செயற்பாடுகளிலும் ஈடுபடுவது அவசியம். சர்வதேச ரீதியான மத்தியஸ்தம் இல்லாமல் எமது பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண முடியாது. அந்த அடிப்படையில், அமெரிக்காவுடன் பேசுவதற்கு தமிழரசுக் கட்சி பிரமுகர்கள் செல்வதில் எந்தத் தவறும் இல்லை. இதில் எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியோ அல்லது பொறாமையோ இல்லை. எந்தப் பின்னணியில் எவர் பேச்சுக்குச் சென்றாலும் எமது மக்களின் அரசியல் தீர்வு தொடர்பிலான நிலைப்பாடுகளை அவர்கள் செல்லும் இடங்களில் தெளிவாக வலியுறுத்தும் வரையில் எனது ஆதரவு அவர்களுக்கு இருக்கும். அவர்கள் அவ்வாறு வலியுறுத்துவதால் முரண்பாடுகள் எதுவும் ஏற்படப் போவதில்லை.

ஒற்றை ஆட்சியின் கீழான எந்த ஓர் அதிகாரப் பகிர்வு ஏற்பாடும் இலங்கையில் தமிழ் மக்களைக் காப்பாற்றாது. ஏற்கனவே ஒற்றை ஆட்சியின் கீழான 13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்படாமல் இருக்கின்றது. ஆகவே, ஒற்றை ஆட்சியின் கீழான எந்த ஒரு தீர்வும் இதேமாதிரியான நிலைமையையே மேலும் ஏற்படுத்தும். இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி அடிப்படையிலான தீர்வே இலங்கையில் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வாக அமைய முடியும். இதனையே, அமெரிக்கா செல்லும் தமிழரசுக் கட்சியின் குழு வலியுறுத்த வேண்டும். இதனை நான் ஏற்கனவே இந்தக் குழுவில் அங்கம்வகிக்கும் எனது நண்பர்களுக்கு வலியுறுத்தியுள்ளேன்.

அதேபோல, இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல், சர்வதேச விசாரணை ஆகியவை தொடர்பில் அவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்வதுடன் ஆட்சி மாற்றங்களுக்கான கருவிகளாக தமிழ் மக்கள் பயன்படுத்தப்படுவதற்கு இடமளிக்காமல் செயற்படவேண்டும் என்பதும் எனது எதிர்பார்ப்பு.

